VIRUDHUNAGAR MUNICIPALITY

FORM 3

Minutes of the Meeting held on 30.09.2019

| Date of Council meeting | Decision Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 30.09.2019 | 447 | **பொருள் – 1**<br>இந்நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப் பணிகளை தினகரன் நாளிதழ் சார்பில் ’தொழில் மலர் 2019‘ ல் அரைப்பக்க அளவில் விளம்பரம் செய்து வெளியிடுவதற்கு உண்டான செலவினத் தொகை ரூ.9000/–யை பொது நிதியில் இருந்து செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.6010/19/இ1 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 448 | **பொருள் – 2**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23,சிவகாசி சாலை–பாத்திமா நகர் சந்திப்பில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகள் பார்ப்பதற்கு ரூ2.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.435 நாள் 30.08.2019ல் | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 17.09.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு
<table>
<tr><th>வ எண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.கே.இராஜ்குமார்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.13 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.அஷ்ரப் அலி–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.95 சதவிகிதம் அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள திரு.கே.இராஜ்குமார்,ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேலும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
அலுவலகக் குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். இ1/5821–1/2019</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>449</td>
<td>பொருள் – 3<br>
விருதுநகர் நகராட்சியின் காரிசேரி கல்குவாரி குடிநீரேற்று நிலையத்தில் முற்றிலும் நீர்மட்டம் குறைந்து கொண்டே வருவதன் காரணமாக கோடை காலத்தினை சமாளிக்கவும், குடிநீர் விநியோகம் கால இடைவெளி அளவுகளும் அதிகரிப்பதாலும், குடிநீர் பயன்பாட்டின் அவசியம் கருதி காரிசேரி கல்குவாரி நீரேற்று நிலையத்தில் புதியதாக போர்வெல் 6 ½’ ஆழ்துளை கிணறு அமைக்கவும் மற்றும் மின் மோட்டார் 7.5 HP குதிரை திறன் உடையது தேவையான மின் உபகரணங்கள் பொருத்தி பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.383, நாள்.31.07.2019ல் நிர்வாக அனுமதி தொகை ரூபாய்.3,75,000/–க்கு பெறப்பட்டு முதல் பகுதியாக பணிகள் செய்யப்பட்டு வந்தது. மேற்காண் பகுதியில் போதுமான குடிநீர் இல்லாத காரணத்தால் தொடர் வறட்சி காரணமாக உடன் ஆனைக்குட்டம் பகுதியில் புதியதாக மேலும் போர்வெல் 6 ½’ ஆழ்துளை கிணறு ஒன்று, மின்மோட்டார் 3 HP குதிரை</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>திறன் உடையது மற்றும் மின் உபகரணங்கள் பொருத்தி குடிநீர் விநியோகம் பணி அத்தியாவசிய அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள மொத்த மதிப்பீடு தொகையாக ரூ.5,64,474/—க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணியில் கூடுதல் செலவினம் மதிப்பீடு தொகை ரூ.1,89,474/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு- 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் பணிகள் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தனிஅலுவலர் அவர்களின் நிர்வாக முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள கூடுதல் செலவினம் மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 5072 / 2019 /இ2</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>450</td>
<td>பொருள் – 4<br>இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கர்மவீரர் பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிகள் பார்ப்பதற்கு ரூ8.40 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.416 நாள் 31.07.2019ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 05.09.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு
<table>
<tr><td>வ எ ண</td><td>ஒப்பந்ததாரர் விபரம்</td><td>மதிப்பீட்டு விலை விகிதம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.கே.காட்டுராஜன் அன் பிரதர்ஸ்—விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.02 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.அஷ்ரப் அலி—விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 4.00 சதவிகிதம் அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள திரு.கே.காட்டுராஜன்அன் பிரதர்ஸ்,ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேலும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>அலுவலகக் குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். இ1/5122–2/2019 | |
| | 451 | **பொருள் – 5**<br>இந்நகராட்சிக்குட்பட்ட ராமமூர்த்தி சாலையின் குடிநீர்த் திட்ட நீரேற்று நிலையம் பிரதான குடிநீர் குழாய்கள் கழிவு நீர் பணி அமைக்க தோண்டும் போது குழாய்கள் உடைப்பு ஏற்பட்டதை புதியதாக பணிகள் மேற்கொள்ள தேவையான பொருட்கள் விநியோகம் செய்து பழுதாகி உள்ள பிரதான குடிநீர் குழாய்கள் உடைப்பு பணிகளை குறுகிய காலத்தில் பழுது பணிகள் பார்த்து முடித்து இயக்கி கொடுத்திடவும், இப்பணிகளை திரு.என்.பாண்டியராஜ் ,ஒப்பந்ததாரர்,விருதுநகர் அவர்களின் மூலம் செய்யப்பட்டு அதற்கான பில் பட்டியல் தொகை ரூ.1,64,104/– நாள்04.09.2019ல் வழங்கப்பட்டு உள்ளது. மேற்படி பணி அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் விதி பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .<br>ந..க.எண். இ1/10188/2019 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 452 | **பொருள் – 6**<br>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பணி வாகனம் எண். TN 67 AF 8139 JCB யின் ஆண்டு பராமரிப்பு பழுது நீக்கும் பணியினை மேற்கொள்ள துப்புரவு ஆய்வர் மற்றும் ஓட்டுநரின் விண்ணப்பத்தின் படி வெற்றி நிறுவனத்திடம் (மதுரை) பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.1,10,948/–ஐ இந்நகராட்சியின் வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.5979 / 2019 / எச்.1 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 453 | **பொருள் – 7**<br>இந்நகராட்சி 36 வார்டுகளிலும், 384 எண்ணம் ஆழ்துளை மின் விசைப்பம்புகள் இயங்கி வருகின்றது. இதில் பல கம்ப்ரசர்கள் அமைக்கப்பட்டு 15 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருவதால் அடிக்கடி பழுது ஏற்படுகின்றது. எனவே,<br>2 HP கம்ப்ரசர் மற்றும் மோட்டார் 5 எண்ணம்<br>2 HP நீர்மூழ்கி மின் மோட்டார் 1 எண்ணம் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,40,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பது ஆயிரம் மட்டும்) க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண். 6124 / 2019/இ2 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 454 | **பொருள் – 8**<br>சொத்துவரி–விருதுநகர் நகராட்சி–வார்டு எண் 35–கதவு எண் 75–3, இராமமூர்த்தி ரோடு பழைய வரி விதிப்பு எண் 35504 வரி விதிப்பு இந்து நாடார்கள் அபிவிருத்தி நவதானியக் கடை தரும பண்டு பெயரில் உள்ள வரி விதிப்பு கட்டிடத்திற்கு 2007–2008 இரண்டாம் அரையாண்டு வரை ரசீது எண் 713754ன்படி 20.12.2007 தேதியில் சொத்து வரி செலுத்தியுள்ளார்கள். அரையாண்டு வரி ரூ.5356/– ஆகும். 01.04.2008 முதல் மேற்படி கட்டிடத்தில் கேந்திரிய வித்யாலயா பள்ளி தற்காலிகமாக இரண்டு ஆண்டுகள் இயங்குவதற்கு விருதுநகர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரால் பெறப்பட்டு, செயல்பட்டு வந்தது. 01.04.2008 முதல் இரண்டு ஆண்டுகளுக்கு (2008–2009 மற்றும் 2009–2010) சொத்து வரி விதிப்பிலிருந்து விலக்களித்து நடவடிக்கை மேற்கொள்ள விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ1/5307/2019. நாள்.02.05.2019 கடிதப்படி சொத்து வரியிலிருந்து விலக்களிப்பப்படுள்ளது. மேற்படி பள்ளிக்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கு காலதாமதம் ஆனதால், மேற்படி பள்ளி மேற்படி கட்டிடத்திலேயே தொடர்ந்து இயங்கி வந்து 09.09.2016 அன்று மேற்படி கட்டிடம் விருதுநகர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரால் விரதநகர் இந்து நாடார்கள் அபிவிருத்தி நவதானிய கடை தரும பண்டு நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விருதுநகர் கேந்திரிய வித்யாலயா பள்ளி தற்காலிகமாக கூடுதலாக இயங்கிய 01.04.2010 முதல் 09.09.2016 வரை உள்ள காலங்களுக்கு நகராட்சி சொத்து வரியிலிருந்து விலக்களிக்க (2010–2011 முதல் 2016–2017 I வரை) விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | ந.க.எண்.அ1/3507/2019. நாள். 02.05.2019ன்படி சொத்து வரியிலிருந்து விலக்களிக்க கடிதம் வரப்பட்டுள்ளது. அதன்படி 01.04.2010 முதல் 30.09.2016 வரை உள்ள காலங்களுக்கு பழைய வரி விதிப்பு எண் 35504க்கு சொத்து வரி விலக்களித்து 01.10.2016 முதல் சொத்து வரி கேட்பு வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்து நாடார்கள் அபிவிருத்தி நவதானிய கடை தரும பண்ட, பவளம் நாராயண சரஸ்வதி மன்றம் 17.06.2019ல் வரி விதிப்பு கோரி வரப்பெற்ற மனுவின்படி வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வாளர்கள் மேற்படி கட்டிடத்திற்கு01.10.2016 முதல் புதிய வரிவிதிப்பாக வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விபரம் கீழ்வருமாறு. | |

| வரி விதிப்பு எண் | கடை எண் | தெரு பெயர் | வருடம் | தொகை |
|---|---|---|---|---|
| 132/035/01447 | 75–3 | இராமமூர்த்தி ரோடு | 2016–2017 II | 115957 |
| | | | 2017–2018 I, II | 231914 |
| | | | 2018–2019 I, II | 231914 |
| | | | 2019–2020 I, II | 231914 |
| | | | மொத்தம் | 811699 |

மேற்படி கட்டிடம் 50 வருடத்திற்கு மேல் உள்ள பழமை வாய்ந்த கட்டிடத்திற்கு தற்போது உள்ள விகிதாச்சாரப்படி 8460 சதுரஅடிக்கு ஒரு சதுரஅடிக்கு 13.71 விகிதாச்சாரப்படி விதிக்கப்பட்ட வரியினை ஆட்சேபித்து உரிமையாளர் கொடுக்கப்பட்ட மனுவினை ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி கட்டிடத்திற்கு பழைய வரி விதிப்பு எண் 35504க்கு அரையாண்டு கேட்பு ரூ.5356/–க்கு 2007–2008 II வரை சொத்து வரி செலுத்தப்பட்டு பள்ளி கட்டிடம் செயல்பட்டு வந்ததால் விலக்களிக்கப்பட்ட விபரம் வருவாய் ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டது.எனவே, தவறாக வரி விதிப்பு செய்யப்பட்ட வரி விதிப்புஎண் 132/035/01447 வரி விதிப்பை இரத்து செய்யவும், 2016–2017 II லிருந்து 2019–2020 II உள்ள ரூ.811699/– சொத்து வரியினை வஜா செய்யவும், பழைய வரி ரூ.5356/–க்கு 2008–2009 சீராய்வின்படி 100 சதவிதம் உயர்வு செய்து 01.10.2016 முதல் கேட்பு ரூ.10712/–க்கு வரி நிர்ணயம் செய்யவும், கேட்பு ரூ.10712/–க்கு 2018–2019 சொத்து வரி சீராய்வின்படி 100 சதவீதம் வரி உயர்வு செய்து, 2018–2019 முதலரையாண்டு கேட்பு ரூ.21424/–படி வரி நிர்ணயம் செய்யவும் செலுத்த வேண்டிய வரித் தொகை கீழ்வருமாறு.

| **அரையாண்டு** | **தொகை** |
|---|---|
| 2016–2017 II | 10712 |
| 2017–2018 I | 10712 |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>2017–2018 II</td><td>10712</td></tr>
<tr><td>2018–2019 I</td><td>21424</td></tr>
<tr><td>2018–2019 II</td><td>21424</td></tr>
<tr><td>2019–2020 I</td><td>21424</td></tr>
<tr><td>2019–2020 II</td><td>21424</td></tr>
<tr><td>SUC 2017–2018 I</td><td>300</td></tr>
<tr><td>2017–18 II</td><td>600</td></tr>
<tr><td>2018–2019 I</td><td>600</td></tr>
<tr><td>2018–2019 II</td><td>600</td></tr>
<tr><td>2019–2020 I</td><td>600</td></tr>
<tr><td>2019–2020 II</td><td>600</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>121132</td></tr>
</table>
<br>
வரி விதிப்பு எண் 132/035/01447 வரி வதிப்பு இரத்து செய்து அதற்கான கேட்பு ரூ.811699/– ஐ இரத்து செய்யவும், பழைய வரி விதிப்பு எண் 132/35504க்கு 2016–2017 IIலிருந்து 2019–2020 II வரை மேற்படி சொத்து வரி சீராய்வின்படி திடக்கழிவு பயன்பாடு கட்டணம் உட்பட ரூ.121132/–ஐ வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க கணினியில் கேட்பு நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.<br>
அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 3203/2019/அ2
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>455</td>
<td>பொருள் – 09<br>
கர்மவீரர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளையொட்டி இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அவசர அவசியம் கருதி வர்ணம் பூசியும்,சிலை சுற்றியுள்ள பீடத்திலும் மற்றும் வளாகத்திலும் வர்ணம் பூசும் பணிகள் திரு.கே.காட்டுராஜன் அன் பிரதர்ஸ் ,ஒப்பந்ததாரர், விருதுநகர் அவர்களின் மூலம் செய்யப்பட்டு அதற்கான பில் பட்டியல் தொகை ரூ 64,660/– நாள்04.09.2019ல் வழங்கப்பட்டு உள்ளது . மேற்படி பணி அவசர அவசியம்</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | கருதி நகராட்சிகளின் விதி பிரிவு **15** ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .<br>ந.க.எண்.இ1/4853/2019 | |
| | 456 | **பொருள் – 10**<br>தமிழக அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.322 நாள்.19.08.2019 படி ஒவ்வொரு நகராட்சியின் தரத்திற்கேற்பவும், மக்கள் தொகையின் அடிப்படையிலும், நகராட்சி பரப்பளவின் அடிப்படையிலும், நகராட்சியின் வருவாய் அடிப்படையிலும் நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரையின்படி, ஒவ்வொரு நகராட்சியிலும் பணி நிரவல் அடிப்படையில் நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் பணியிடங்கள் தோற்றுவித்தும், மாற்றியமைத்தும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் விருதுநகர் நகராட்சி நகரமைப்பு அலுவலர் நிலை I பணியிடம் நகரமைப்பு அலுவலர் நிலை II ஆக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. விருதுநகர் நகராட்சி 01.11.1956 முதல், முதல்நிலை நகராட்சியாக செயல்பட்டு தற்சமயம் தேர்வுநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இதன் பரப்பளவு 6.35 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி விருதுநகர் நகராட்சி மக்கள் தொகை 72144 ஆகும். இதன் தற்போதைய 2018-2019 ஆண்டு மொத்த வருவாய் 2739.82 ஆகும். இதனுடன் SFC தொகையும் சேரும். இந்நகராட்சி சிறப்பு நிலை நகராட்சி அந்தஸ்தக்கு உயர வழிவகை உள்ளது. இந்நகராட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கு.காமராஜ் அவர்கள் நகர்மன்றத் தலைவர் ஆக பதவி ஆற்றிய பாரம்பரியமிக்க நகராட்சி ஆகும். தற்சமயம் இந்நகராட்சி எல்லையுடன் அருகாமையில் உள்ள பாவாலி, கூரைக்குண்டு, ரோசல்பட்டி, முத்துராமன்பட்டி, அல்லம்பட்டி , சிவஞானபுரம் ஆகிய ஊராட்சிகளை உள்ளடக்கி நகராட்சி எல்லையை விஸ்தரிப்பு செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு கோப்பு பரிசீலணையில் உள்ளது. எதிர்காலத்தில் இந்நகராட்சி சிறப்புநிலை நகராட்சியாக தர உயர்வு ஆக வேண்டிய நிலையில் உள்ளது. மேலும் விருதுநகர் நகராட்சி, விருதுநகர் மாவட்டத்தின் தலைநகரில் அமைந்துள்ள ஒரு நகராட்சி ஆகும். எனவே விருதுநகர் நகராட்சி, நகரமைப்பு அலுவலர் நிலை II பணியடத்தினை மீண்டும் நகரமைப்பு அலுவலர் நிலை I ஆக மாற்றம் செய்ய நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற மன்றப்பொருள் ஒப்புதலுக்கு.<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அங்கீகரிக்கலாம். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 457 | **பொருள் – 11**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, மேல ரத வீதியில் சிறுபாலம் கட்டப்பட்டதற்கு உண்டான விடுபட்டபணிகள் திருமதி.ஆர்.செல்வி,ஒப்பந்ததாரர்,விருதுநகர் அவர்களின் மூலம் செய்யப்பட்டு அதற்கான பில் பட்டியல் தொகை ரூ 45,614/– நாள்23.09.2019ல் வழங்கப்பட்டு உள்ளது . மேற்படி பணி அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் விதி பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .<br>ந.க.எண்.இ1/2815–2/2019 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 458 | **பொருள் – 12**<br>இந்நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப் பணிகளை தினமலர் நாளிதழ் சார்பில் 'தொழில் மலர் 2019' ல் அரைப்பக்க அளவில் விளம்பரம் செய்து வெளியிடுவதற்கு உண்டான செலவினத் தொகை ரூ13000 + ஜீ.எஸ்.டி –யை பொது நிதியில் இருந்து செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.6010/19/இ1 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 459 | **பொருள் – 13**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32ல் உள்ள அல்லம்பட்டி கிராமம் பொது திறந்த கிணறு (கிழக்கு), அல்லம்பட்டி கிராமம் கிரிமோடோரியம் ஆழ்துளை கிணறு (மேற்கு), உரக்கிடங்கு ஆழ்துளை கிணறு (தெற்கு), முனியாண்டி கோயில் ஆழ்துளை கிணறு (வடக்கு) ஆகிய இடங்களில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்களால் பகுப்பாய்வு ஆய்வறிக்கை மேற்கொண்டதற்கு பகுப்பாய்வு கட்டணமாக ரூ10,440/–யை உடனடியாக செலுத்தப்பட வேண்டும் என தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ,விருதுநகர் அவர்களின் கடித எண்.DEE/VNR/F.ROA-VRD-Municipality/2019, நாள்.13.09.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதன்படி மேற்படி தொகையை அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகையை தமிழ்நாடு மாசு | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்களுக்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் .<br>ந.க.எண்.6031–1/2019/எச்1 | |
| | 460 | **பொருள் – 14**<br>விருதுநகர் நகராட்சியின் ஒண்டிபுலி கல்குவாரி குடிநீரேற்று நிலையத்தின் வாயிலாக நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் பிரதான குடிநீர் குழாய்கள் அடிக்கடி உடைப்புகள் ஏற்பட்டு வருவதால், குடிநீர் பயன்பாட்டின் அவசியம் கருதி புதியதாக தேவையான ஏர்வால்வு அதன் உபகரணங்கள் வாங்கி பொருத்தி குடிநீர் பணிகள் தொடர்ந்து செய்திட அவசியம் கருதி திரு.ஆர்.சுந்தர்ராஜ், ஒப்பந்ததாரர், விருதுநகர் அவர்களின் மூலம் செய்யப்பட்டு அதற்கான பில் பட்டியல் தொகை ரூ.28550/– நாள்.04.09.2019ல் வழங்கப்பட்டு உள்ளது. மேற்படி பணி அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் விதி பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.2311 /2018 / இ2 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 461 | **பொருள் – 15**<br>விருதுநகர் நகராட்சி பகுதியில் உள்ள ஸ்டோக் பம்பு மற்றும் கம்ப்ரசர் மோட்டார்கள் பராமரிப்பு பழுது நீக்கம் செய்யும் பணிகள் வார்டு எண்.1 முதல் 36 வரை ஆண்டு பராமரிப்பு பணிகள் பாராளுமன்ற தேர்தல் 2019 நடத்தை விதிகள் அமலில் இருந்தால் ஒப்பந்தப்புள்ளிகள் கோர வழிவகை இல்லாத காரணத்தினாலும், குடிநீர் பணிகள் தொடர்ந்து செய்திட அவசியம் கருதி திரு.கண்ணன் எலக்ட்ரிக்கல்ஸ், ஒப்பந்ததாரர், விருதுநகர் அவர்களின் மூலம் செய்யப்பட்டு அதற்கான பில் பட்டியல் தொகை ரூ.3,20,000/– நாள்.06.09.2019ல் வழங்கப்பட்டு உள்ளது. மேற்படி பணி அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் விதி பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண். 3109 /2018 / இ2</td><td></td></tr>
<tr><td></td><td>462</td><td>பொருள் – 16<br>இந்நகராட்சியின் பொதுசுகாதார வாகனம் எண். வண்டியின் பழுதுகளை சரிபார்க்க நகர்மன்ற தீர்மான எண்.426, நாள்.30.08.2019ல் அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழ்க்கண்டஉள்ளவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>விபரம்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>Vetri Auto mobiles, Virudhunagar.</td><td>12800</td></tr>
<tr><td>2</td><td>R.A.267, srivilliputtur Block Agro Engg. And Service Co-op Centre Ltd, Srivilliputtur.</td><td>12000</td></tr>
<tr><td>3</td><td>Ravimohan Auto Service, Virudhunagar.</td><td>14300</td></tr>
</table>
மேற்கண்டுள்ள விபரப்படி குறைந்த விலைப்புள்ளியை வரிசை எண்.2–ஐ ஏற்கலாம். R.A.267, srivilliputtur Block Agro Engg. And Service Co-op Centre Ltdக்கு வேலை உத்தரவு வழங்கி பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>463</td><td>பொருள் – 17<br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.17349/2019/இ3 .நாள்.03.09.2019ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் புதிதாக அமைப்பதற்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–20ம் ஆண்டிற்கு ரூ500.00 இலட்சத்திற்கு கீழ்க்கண்டுள்ளவாறு</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| Sl.No. | Name of work | Length (K.M) | Amount (Lakh) |
|---|---|---|---|
| Package-1 | Providing B.T.Surface at South car street,West pandiyan colony,B1 B1 Road,B2 B2 Road,Old bus stand Road (wards-22,14,2,4,1,1) | 1.565 | 190.00 |
| | Providing Paver Block Pavement at Kathalam Patti Road, Paranginathapuram Road, Pullalakottai Road, A.P.Shanmugam Street, A.P.Shanmugam Cross Street 1,2,3.(wards-34,1,3,8) | 0.942 | |
| Package-2 | Providing B.T.Surface at AA Road, Lic colony,Lig colony cross street 1,2, Pillaiyar koil street, Burma colony cross street 5,6, Avalappa samy koil street,Kattaiyapuram (wards-6,36,22,17,25,25) | 2.072 | 200.00 |
| | Providing Paver Block Pavement at AA Road, Lig colony, Kullur chandai Road, Sivanthipuram street 1, Pound street, Vellaiyan street(wards-6,36,32,31,31,32) | 0.625 | |
| Package-3 | Providing B.T.Surface at Anaikuttam Head works to Summer storage Tank. | 1.350 | 110.00 |
| | **Total** | **6.554** | **500.00** |

**TURIP - Rs.175.00 LAKH**
**SFC/CFC/Land regularization fund - Rs.200.00 LAKH**
**ULB Contribution - Rs.125.00 LAKH**
**-------------------------**
**Total - Rs.500.00 LAKH**
**----------------------------**

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.இ1–5513–2019 | |
| | 464 | **பொருள் – 18**<br>இந்நகராட்சியில் கீழ்க்கண்டுள்ள பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் கீழ்க்கண்டுள்ள முடிவுற்ற பணிகளுக்கு பில் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள வைப்புத் தொகை மற்றும் முன் வைப்புத் தொகை கேட்டு விண்ணப்பித்துள்ளதின் அடிப்படையிலும், கீழ்க்கண்டுள்ள பணிகளுக்கு தணிக்கைத் தடை இல்லாத காரணத்தினாலும் ஒப்பந்தக்காரரின் வைப்புத் தொகை மற்றும் முன் வைப்புத் தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | ஒப்பந்த தாரரின் பெயர் | பணியின் பெயர் | வைப்புத் தொகை (பில்லில் பிடித்தம்) ரூ. | முன் வைப்புத் தொகை ரூ | மொத்த தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | திருமதி.பி.சக்கரை அம்மாள் (கோப்பு எண்.11670/11/இ3) | ஐ.எஸ்.பி டாய்லெட் பழுது மற்றும் பராமரிப்பு பணி 2011–12. | ரூ 1200/– நாள்.09.10.2014<br>ரூ 1180/– நாள்.21.01.2015 | ரூ1200/– சலான் நம்பர்.121740, நாள்.21.03.2012 | ரூ3580 |
| 2 | திருமதி.பி.சக்கரை அம்மாள் (கோப்பு எண்.13800/13/இ3) | மேலரத வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் 2013–14. | ரூ 4000/– நாள்.07.03.2014 | ரூ4000/– சலான் நம்பர்.1308854, நாள்.31.12.2013 | ரூ8000 |
| 3 | திருமதி.பி.சக்கரை அம்மாள் (கோப்பு எண்.12670/14/இ3) | பி1பி1 சாலையில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் பணி 2014–15. | ரூ 6750/– நாள்.16.02.2015 | ரூ6750/– சலான் நம்பர்.140792, நாள்.24.12.2014 | ரூ1350 |
| 4 | திருமதி.பி.சக்கரை அம்மாள் (கோப்பு எண்.6327/15/இ3) | ஏ.டி.பி.காம்பவுண்டில் நியாய விலைக்கடை கட்டுதல் 2015–16. | ரூ 6500/– நாள்.27.05.2016 | ரூ6500/– சலான் நம்பர்.1505688, நாள்22.09.2015 | ரூ1300 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | திருமதி.பி.சக்கரை அம்மாள் (கோப்பு எண்.11050/14/இ3) | நேருஜீ நகரில் உள்ள பொது சுகாதார வளாகத்தை இடித்தல் 2014–15. | ரூ 250/– நாள்.03.03.2015 | ரூ250/– சலான் நம்பர்.1407931, நாள்.24.12.2014 | ரூ500/– |
| 6 | திருமதி.பி.சக்கரை அம்மாள் (கோப்பு எண்.14396/11/இ3) | அங்கன்வாடி மையத்தில் குழந்தை நேய கழிப்பறை கட்டுதல் 2012–13. | ரூ 926/– நாள்.16.02.2015 | ரூ1250/– சலான் நம்பர்.1206746, நாள்.05.11.2012 | ரூ2176/– |
| 7 | திருமதி.பி.சக்கரை அம்மாள் (கோப்பு எண்.14396/11/இ3) | பாவாலி முஸ்லீம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் அங்கன்வாடி மையம் கட்டுதல் 2011–12. | ரூ 4500/– நாள்.08.07.2013 | ரூ4500/– சலான் நம்பர்.1204589, நாள்.17.08.2012 | ரூ9000/– |

மேற்கண்டுள்ள பட்டியலில் கண்டுள்ளபடி ஒப்பந்ததாரான திருமதி.பி.சக்கரையம்மாள், ஒப்பந்ததாரருக்கு வைப்புத்தொகை மற்றும் முன்வைப்புத் தொகைகளை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.